



# "உலகத் தத்துவங்களை உள்வாங்கி வளர்ந்ததுதான் திராவிட இயக்கம்!"

**வழக்கறிஞர் அருள்மொழி,**
**பிரச்சார செயலாளர், திராவிடர் கழகம்**

**கழக இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில், இளம் பேச்சாளர்கள் உலக அளவிலான தத்துவங்களையும் தலைவர்களையும் அறிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து, திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி 'தத்துவங்கள் தெளிவோம்; தலைவர்கள் அறிவோம்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை:**

### தத்துவங்களின் தேவை

"பொதுவாக 'காலகாலமாக' என்று பேசுவது ஒரு பழக்கம். காலகாலமாக என்ன நடந்தது என்பதை, நமக்கு சொல்லுகிற ஒரு கதைக்குப் பெயர்தான் வரலாறு. இந்த வரலாறு எங்கிருந்து தொடங்கியது, எங்கெல்லாம் பயணப்பட்டு இருக்கிறது. இப்போது எந்த வழியிலே நடந்து கொண்டிருக்கிறது என்கிற ஒரு படப்பிடிப்புதான் கடந்த காலத்தை நமக்கு நினைவூட்டுகிறது. வந்த வழியைத் தெரிந்து கொண்டால்தான், இனிமேல் போகிற வழி எப்படி இருக்க வேண்டும், நாம் போகிற வழியில் என்னென்ன தடைகள் இருக்கும், அவற்றை நாம் எப்படி எதிர்கொள்ள முடியும் என்கிற அடிப்படை அறிவை, அது நமக்கு கொடுக்கும். வந்த வழியை அறியும் வரலாறு, இனி வரக்கூடிய காலத்தை எதிர்கொள்ளும் அறிவை, நமக்கு கொடுக்கும் என்பதுதான் இந்தப் பயிற்சி முகாமின் அடிப்படை.

நீங்கள் இரண்டு நாட்களாக ஏராளமான செய்திகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். நாம் யார், நம்முடைய இயக்கம் எந்த வகையிலே தனிப்பட்ட தன்மை உடையது என்பது நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது அடிப்படை. இந்த உலகில் எத்தனையோ இயக்கங்கள் தோன்றி யிருக்கின்றன. சமுதாய மாற்றத்திற்காகத்தான் அவர்கள் எல்லாம் உழைத்தார்கள். மக்களை முன்னேற்றுவதற்காக சீர்திருத்துவதற்காகப் பிறந்த தலைவர்கள் உண்டு. அவர்களைப் பற்றி அறிந்துகொள்வது மிக முக்கியம். அந்தத் தத்து வங்களை, தத்துவங்களை முன்வைத்த தலைவர்களைப் பற்றி அறியும்போதுதான், நம்முடைய திராவிட இயக்கத்தையும் அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்துகொள்ள முடியும்.

### முதலாளித்துவம் என்பது ஏகபோகமே!

சமூக முன்னேற்றங்களுக்காக ஒருபுறம் இயக்கங்கள் இருக்கின்றன என்றால், இன்னொருபுறம் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டு ஆதிக்கத்தையே எண்ணமாகக் கொண்ட இயக்கங்களும் இருக்கின்றன. 'தங்களைத் தவிர, மற்ற எல்லோரும் இரண்டாம் தர மக்களே' என்று நினைக்கக்கூடிய கூடிய கொடிய சிந்தனை உள்ளவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு தத்துவம் இருந்திருக்கின்றது. அவர்களும் சில இயக்கங்களை நடத்தியிருக்கிறார்கள். இந்த இரண்டு சிந்தனைகளுக்கிடையிலான போர்தான், உலகத்தை இன்றைக்கும் நடத்திக் கொண்டிருக்கிறது.

'எல்லாம் எங்களுக்கே' என்பது இன்றைய விளையாட்டில்கூட இருக்கிறது. முன்பெல்லாம் குழந்தைகள் சோறு கடைந்து விளையாடுவார்கள். 'அம்மாவுக்கு ஒரு வாய், அப்பாவுக்கு ஒரு வாய், நாய்க்குட்டிக்கு ஒரு வாய்' என்று அந்த விளையாட்டின் தன்மையிருக்கும். ஆனால், இப்போதைய விளையாட்டில் அந்தப் பகிர்தல் இல்லை. மாறாக "நான் ஸ்டேஷனை வாங்கி விட்டேன். இந்த இடத்தை ஆக்கிரமித்துவிட்டேன்" என்ற மனப்பான்மைதான் இன்றைய விளையாட்டுகளின் அடிப்படையாக இருக்கிறது. இந்த ஏகபோக மனநிலைதான் அதானி ஆகிறது; அம்பானி ஆகிறது,; எலான் மஸ்க் ஆகிறது. இந்த கார்ப்பரேட்டுகளால் உருவாக்கப்படுகிற, யாருடனும் பகிர்ந்துகொள்ளாத, எல்லாவற்றையும் தனக்குச் சொந்தமாக்க நினைக்கிற மனநிலை குழந்தைகள் மனதில் விதைக்கப்படுகிறது. இந்தத் தத்துவத்திற்குப் பெயர்தான் முதலாளித்துவம்.

இந்த முதலாளித்துவத்திற்கு என்று தனிப்பட்ட கட்சியோ இயக்கமோ கிடையாது. ஆனால், உலகம் முழுவதும் இதற்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பெயர் வலதுசாரிகள். நம் ஊர் தொலைக்காட்சி விவாதங்களில், எந்த அடையாளமும் இல்லாமல் ஒருவர் வந்திருப்பார். அவருக்குப் பெயர் வலதுசாரி. உலகத்தில் சுரண்டல் எப்போதும் தொடர வேண்டும்




என்பதுதான் வலதுசாரிகளின் ஒரே நோக்கம்.

இத்தகைய சுயநல தத்துவத்துக்கு மாறாக 'எல்லோரும் பசியற்று இருக்க வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் சமமாகக் கிடைக்க வேண்டும்''என்று நினைத்த சிந்தனையாளர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் கார்ல் மார்க்ஸ். உலகத்தை ஆட்டி வைக்கிற பூதம் ஒன்று வருகிறது என்று பெரும் முதலாளிகள் எல்லாம் பயந்தார்கள். அவர்கள் பூதம் என்று சொன்னது, கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை. அந்த அறிக்கை, 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்று சொன்னது. அந்த சித்தாந்தத்தின் பெயர் பொது உடைமைத் தத்துவம். கார்ல் மார்க்ஸுக்குத் தோழராக ஃபிரெடரிக் ஏங்கெல்ஸ் இருந்தார்.

தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் போல் அவர்கள் இருந்தார்கள். ஜெர்மனியில் பிறந்து, லண்டன் நகரத்திலே வாழ்ந்து அவர்கள் உருவாக்கி வந்த பொது உடைமைத் தத்துவத்தை அங்கிருந்து எத்தனையோ கிலோமீட்டர் தொலைவில் இருந்த ரஷ்யாவிலே அறிமுகப்படுத்தி,



புரட்சியை நடத்தி, சோசலிச ஆட்சியை நிறுவியவர் லெனின்.

### லெனின் - ஹிட்லர் - கரிபால்டி

அன்றைக்கு லெனின் நடத்திய அந்தப் புரட்சியும் அவர் நிறுவிய ஆட்சியும்தான் உலகில் சமதர்ம சமுதாயத்திற்கு இன்றைக்கு வரை எடுத்துட்டுக்காட்டாக இருக்கின்றன. தந்தை பெரியார் ரஷ்யா சென்று பார்த்து, சோவியத் யூனியனைப் பாராட்டி எழுதினார். அந்த சோவியத் யூனியனை, சோசலிச அரசாங்கத்தை எப்படியாவது ஒழிக்கவேண்டும் என்று முதலாளித்துவவாதிகள் முயற்சி செய்தபோது அவர்களுக்குக் கிடைத்தவர்தான் , அதே ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இருந்த கோர்ப்பசேவ். 'பிரஸ்த்ராய்க்கா' என்ற பெயரால் மறுமலர்ச்சியை ஏற்படுத்தப்போகிறேன் என்று அவர் கொண்டுவந்த திட்டத்தால்தான் சோவியத் யூனியன் உடைந்தது.

'பிறப்பினாலே இவன் உயர்ந்தவன், பிறப்பினால் இவன் அறிவாளி. எங்கள் இனம் உயர்ந்த இனம். எங்கள் இனம் ஆரியன் இனம்' என்ற நாஜி தத்துவத்தை ஏற்றுக்கொண்டவர் ஹிட்லர். 'ஆரியன் என்பவன் உலகத்திலே உயர்ந்தவன். அந்த ஆரிய இனத்தை சவாலுக்கு அழைக்கிற யூத இனம் எங்கள் மண்ணிலே வாழக்கூடாது' என்று யூதர்களைக் கொன்று குவித்தான் ஹிட்லர். அவனுடைய தத்துவம் நாஜிசம் என்றால், இத்தாலியில் இதேமாதிரியான சர்வதிகாரத் தத்துவமான பாசிசத்தைக் கொண்டு ஆட்சி நடத்தியவன் முசோலினி. நாசிசம், பாசிசம் போன்ற மனித விரோத தத்துவங்களை நியாயப்படுத்த அவர்கள் அதற்கு வைத்துக் கொண்ட பெயர் தேசபக்தி. இதை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், பாசிஸ்ட்டுகளும் நாசிஸ்ட்களும் தங்களுக்குச் சூட்டிக் கொள்ளுகிற பெயர், நாங்கள் தேசபக்தர்கள் என்பது. இந்தியாவிலும் இப்போது பாசிஸ்ட்கள் தங்களைத் தேசபக்தர்கள் என்றுதான் சொல்லிக்கொள்கிறார்கள்.

இத்தாலியில் முசோலினிக்கு முன்னால் ஒருவர் இருந்தார். அவருடைய சிந்தனையை உலகம் பாராட்டியது. அவர் பெயர் கரிபாலிட்டி. அவர் 'செஞ்சட்டைப்படை இயக்கம்' நடத்தியவர். ஒரு சாதாரண விவசாயி மீனவராகப் பிறந்து, அந்த இத்தாலியிலே பெரிய புரட்சியை நடத்தி, பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து இருந்த நாடுகளை ஒன்றுபடுத்தி, அந்த நாட்டை ஒரு வலிமைமிக்க நாடாக ஆக்கிவிட்டு அவர் சொன்னார். 'எனக்கு போதும் நான் விடை பெற்றுக் கொள்கிறேன்' என்று. அப்படி விடைபெற்றுக் கொள்ளும்போது, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று மக்கள் கேட்டார்கள். "ஒரு பை நிறைய வேர்க்கடலை விதையைக் கொடுங்கள். நான் இனி விவசாயியாக வாழப்போகிறேன்" என்றார் அவர்.

### மாவோவும் கலைஞரும்

மார்க்சிய சிந்தனையின் அடிப்படையில் புரட்சி நடத்தி வலிமைமிக்க சீனாவை உருவாக்கியவர் மாசேதுங். அவரைத்தான் 'மாவோ' என்று மக்கள் செல்லமாக அழைத்தார்கள். 'மக்களின் நண்பன்' மாவோ நடத்திய பயணம்தான் நீண்ட பயணம். அரச வம்சத்தின் ஆட்சியை வீழ்த்திவிட்டு, புரட்சிகரப் படை சோசலிச ஆட்சியை அமைப்பதற்காக மாவோ நடத்திய நடைப்பயணத்தின் பெயர் 'நீண்ட பயணம்'. தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் திருச்செந்தூர் கோயில் தக்கார் படுகொலையைக் கண்டித்து முத்தமிழறிஞர் கலைஞர் நடைபயணம் சென்றபோது அதற்கு அவர் சூட்டிய பெயர் 'நீதி கேட்டு நெடும்பயணம்'. புரட்சிகர, முற்போக்குச் சிந்தனை எங்கிருந்து

> **"புரட்சிகர, முற்போக்குச் சிந்தனை எங்கிருந்து வந்தாலும், அதை ஏற்று பிரதிபலித்தவர்கள்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்!"**

வந்தாலும் அதை ஏற்று பிரதிபலித்தவர்கள்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்.

மாவோவிற்கு முன்னால் சீனாவில் இருந்த சமூகச்சிந்தனையாளர் சன்யாட்- சென். 'முரசொலி பாசறை' பக்கத்தில் 'திராவிடப் போராளிகள்' தொடரில் பினாங்கு ஜானகி அம்மா பற்றி எழுதியிருக்கிறேன். தஞ்சையைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜானகி, மருத்துவர் சமூகத்தைச் சேர்ந்த அப்பாவு பண்டிதரைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார். அதுமட்டுமல்ல தன் பெயரையும் அவர் 'பண்டிதை ஜானகி அம்மாள்' என்று மாற்றிக்கொண்டது அந்தக்காலத்தில் மிகப்பெரிய புரட்சிகரச் செயல். பினாங்கு நகரத்தில் இருந்து அவர் 'குடி அரசு' இதழுக்கு எழுதும் கட்டுரைகள் கப்பலில் வந்து சேரும். அப்படிப்பட்ட முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட ஜானகி அம்மாள் - அப்பாவு பண்டிதர் தம்பதிகளுக்கு நான்கு குழந்தைகள். அவர்களின் பெயர் என்ன தெரியுமா? சமரசம், சமதர்மம், சன்யாட்சென், ராஜாராம் மோகன் ராய். சீர்திருத்தச் சிந்தனைகளையும் சீர்திருத்தவாதி களையுமே தங்கள் குழந்தைகளுக்குப் பெயர்களாகச் சூட்டினார்கள் அவர்கள்.

### சீர்திருத்தத்தால் வந்த சோதனைகள்

சன்யாட்-சென் என்று பெயர் வைத்ததிலும் இவர்கள் ஒரு பிரச்னையைச் சந்தித்தார்கள். இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் இவர்கள் வசித்த பினாங்குவை பிரிட்டிஷாரிடம் இருந்து ஜப்பான் கைப்பற்றியது. ஜப்பானும் சீனாவும் எதிர்முகாமில் இருந்த நாடுகள். சன் யாட்-சென் என்ற சீனச் சிந்தனையாளரின் பெயரைச் சூட்டியதால், பினாங்கு ஜானகி அம்மாளின் குடும்பம் ஜப்பான் ராணுவத்தால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

'நாங்கள் பெரியார் தொண்டர்கள்; திராவிடர் கழகத்துக்காரர்கள். எங்கள் இயக்கம் சீர்திருத்த இயக்கம். அதனால்தான் நாங்கள் சீர்திருத்தவாதிகளின் பெயர்களை எங்களுடைய பிள்ளைகளுக்கு வைத்தோம்' என்று சொல்லி, அந்த விசாரணையிலிருந்து தப்பி இருக்கிறார்கள் பினாங்கு ஜானதி - பண்டிதர் அப்பாவு தம்பதி. இப்படி உலகின் மாபெரும் சிந்தனையாளர்களையும் முற்போக்குத் தத்துவங்களையும் மதித்து வளர்ந்ததுதான் திராவிட இயக்கம்.

### ஆன்மிகத்திலும் ஆரிய - திராவிடப் போராட்டம்

உலகளவில் மட்டுமல்ல, இந்திய அளவிலும் பல தத்துவங்களை உள்வாங்கியது திராவிட இயக்கம். ஆன்மிக, பக்தி இலக்கியத்திலேயே ஆரியத்துக்கு எதிரான குரல்கள் உண்டு. 'சொற்றமிழால் என்னைப் பாடு' என்று சிவபெருமான் சொல்வதாக சைவமும் 'பைந்தமிழ் பின் சென்ற பச்சை பசுங்கொண்டலே' என்று திருவரங்கப் பெருமாளைப் பாடுவதாக வைணவமும் சொல்வது சமஸ்கிருத ஆதிக்கத்துக்கு எதிரான குரல்கள்தான். அதேபோல் வைணவத்தில் சாதியத்துக்கு எதிராகக் குரல் கொடுத்த ராமானுஜரின் வாழ்க்கை வரலாறை 'மதத்தில் புரட்சி செய்த மகான்' என்று கலைஞர் எழுதினார். இப்படி ராமானுஜர், சித்தர்கள், வள்ளலார் ஆகியவர்களின் தொடர்ச்சியாக 1925-இல் உருவானதுதான் தந்தை பெரியாரின் 'சுயமரியாதை இயக்கம்'.

மதமான பேய் என்னைப் பிடியாதிருக்க வேண்டும் என்று வள்ளலார் சொன்னது. ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைக்கு அயோத்திதாசர் பண்டிதர் 'திராவிட சங்கம்' அமைத்தது. இவை எல்லாம் சேர்ந்து ஒரு சொல்லில் அடங்கியது அதன் பெயர் 'சுயமரியாதை'. இப்போது சிலர் 'திராவிடம்னா என்னன்னு சொல்லுங்க' என்று அடம்பிடிக்கிறார்கள். 'திராவிடம் என்றால் சுயமரியாதை என்று பொருள். உங்களுக்கு சுயமரியாதை இல்லையென்றால், திராவிடமும் தேவைப்படாது' என்று அழுத்தமாகச் சொல்லுங்கள்.

### நமது கடமை

தந்தை பெரியார் 'திராவிடம்' என்பதற்கு இரண்டு வரையறைகளை முன்வைத்தார். ஒன்று தேவநேயப்பாவாணர் போன்ற அறிஞர்கள் சொன்னதைப்போல், 'வட இந்தியர்கள் தமிழை உச்சரிக்கத் தெரியாமல் த்ரமிள, திரவிட, திராவிடம் என்றார்கள்' என்ற விளக்கம். மேலும்

'செல்வ வளம் மிக்க இடத்தை, கல்வி சிறந்த இடத்தை திரு இடம், திருவிடம் என்பார்கள். அந்த திருவிடம்தான் திராவிடம் என்றானது' என்று தந்தை பெரியார் சொல்கிறார். 'இந்த இரண்டில் எந்த விளக்கம் உங்களுக்குச் சரி என்று படுகிறதோ, அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றார் பெரியார். நம்மைப் பொறுத்தவரை இரண்டுமே சரிதான்.

உலகளவிலான எல்லா முற்போக்குத் தத்துவங்களையும் அறிந்து, புரட்சிகர, சீர்திருத்தச் சிந்தனையாளர்களின் சிந்தனைகளை உள்வாங்கி, நம் மண்ணுக்கேற்றபடி செயல்படக்கூடியதுதான் திராவிட இயக்கம். 'மரங்கள் ஓய்வெடுத்தாலும் காற்று விடுவதில்லை' என்றார் மாவோ. அப்படித்தான் இன்று ஒன்றிய அரசு நமக்கான நிதியை மறுத்து, மொழியைத் திணித்து நம்மைச் செயல்பட தொடர்ந்து தூண்டிக்கொண்டிருக்கிறது. நாம் தொடர்ந்து செயல்பட உலகளவிலான பார்வையும் திராவிடம் என்ற வலுவான அடித்தளமும் எப்போதும் தேவை. இத்தகைய உணர்வுடன் இளம் பேச்சாளர்கள் சிறப்பாகச் செயல்படுங்கள்!"